DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -7

| | | |
|---|---|---|
| Name | : திரு. கோபி | Caste: |
| Father's Name: | திரு. கோவிந்தசாமி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 3rd day of January -2024.

**A1 , A2, A5 to A9, A11, A13 to A18 present. A3 produced.**

**Date: 03.01.2024**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம், வங்குடிகிராமத்தில் காலனியில் கீழவீதியில் வசித்து வருகிறேன். நான் மருந்தியல் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கொலைசெய்யப்பட்ட ஐந்து நபர்களையும் தெரியும் அவர்கள் எனக்கு பங்காளி உறவு முறை வேண்டும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் எனது உறவுகாரர்கள் தான்.

16.05.2008 வெள்ளிக்கிழமை அன்று காலை சுமார் 10.00 மணியளவில் நான் தண்ணீர் பிடிப்பதற்காக எனது வீட்டிலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவிலுள்ள தேவகுமாரி க.பெ.காளிமுத்து என்பவரது வீட்டின் அருகே உள்ள பொதுகுழாயிக்கு சென்றேன். அங்கு அப்போது செல்வம் த.பெ.துரைசாமி, மல்லிகா க.பெ.செல்வம், சரோஜா க.பெ.நடராஜன் ஆகியோர் இருந்தார்கள். அப்போது மகாலிங்கம் ஓடிவந்து காமராஜ் வீட்டிற்கும், வேலாயுதம் வீட்டிற்கும் நடுவில் ரோட்டில் நின்றார்.

அப்போது எதிரி தினேஷ் பட்டாகத்தியால் மகாலிங்கத்தை கழுத்தில் வெட்டினார்.

சாட்சி மாற்றி எதிரி ராஜதுரை என்பவர் தான் பட்டாகத்தியால் மகாலிங்கத்தின் கழுத்தில் வெட்டியதாக கூறுகிறார். எதிரி தினேஷ் வீச்சருவாளால் மகாலிங்கத்தின் வலது கன்னத்திலும், வலது தோள்பட்டையிலும் வெட்டினார். மகாலிங்கம் இறந்ததிற்கு பின்னர் தான் அவரை விட்டார்கள்.

நான் வலது பக்கமாக திரும்பி பார்த்தபோது பூராசாமி என்பவரது கடையின் அருகில் காசிநாதன், தர்மலிங்கம், ஜானகி ஆகியோர் வெட்டுபட்டு கிடந்தார்கள். அதில் ஜானகி மட்டும் அதிஷ்டவசமாக பிழைத்துக்கொண்டார். அதன்பின்னிட்டு நான் சுரேஷ் மற்றும் பிரபு ஆகியோர் கொலை செய்யப்பட்டதாக ஊர்மக்கள் சொல்லி தெரிந்துகொண்டேன். நான் சுரேஷ் மற்றும் பிரபு ஆகியோரின் பிரேதத்தை நான் பார்க்கவில்லை.

சம்பவத்தின்போது நானும், அருகிலிருந்தவர்களும் எதுவும் செய்யவேண்டாம் என்றும் சத்தம்போட்டோம் ஆனால் அதனை எதிரிகள் பொருட்படுத்தவில்லை. அங்கிருந்த ஆஜர் எதிரிகள் அனைவரும் எடுத்த சபதத்தை முடித்துவிட்டதாக கோரசாக சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>8 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

16.05.2008 அன்று நான் வேலைக்கு போய்விட்டேன் என்றால் சரியல்ல. ஊரில்தான் இருந்தேன். அந்த சமயத்தில் நான் முதுநிலை மருந்தாக்கவியல் இரண்டாம் ஆண்டு படித்துகொண்டிருந்தேன். நான் சொன்னதுபோல் அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

போலிசார் தோரயமாக ஒருமணி நேரத்தில் கிராமத்திற்கு வந்துவிட்டார்கள். ஒருமணி நேரத்தில் போலிசார் கிராமத்திற்கு வந்துவிட்டதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. தர்மலிங்கம், காசிநாதன் ஆகியோர் வெட்டப்பட்டதை நான் பார்க்கவில்லை. நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், 8 ஆம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

<u>**13 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

போலிசார் என்னை சம்பவதினத்தன்று சுமார் 11.30 மணியளவில் விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் நான் முதுநிலை மருந்தாக்கவியல் இரண்டாம் ஆண்டு படித்துகொண்டிருந்ததாக சொன்னேன். நான் அண்ணாமலை பல்கலைகழகத்தில் படித்தேன். அன்றைய தினம் எனக்கு Study Holiday ஆகும். அன்றைய தினம் கல்லூரிக்கு விடுமுறை இல்லை என்றாலும், நான் கல்லூரிக்கு போய்இருந்தேன் என்றாலும் சரியல்ல.

போலிசார் என்னை விசாரித்தபோது ஆஜர் எதிரிகள் அனைவரும் சம்பவஇடத்தில் இருந்ததாக சொன்னேன். எதிரிகள் தினேசும், ராஜதுரையும் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி வந்து மகாலிங்கத்தை கொலை செய்தார்கள். மற்ற எதிரிகள் அனைவரும் காசிநாதன், தர்மலிங்கம், ஜானகி ஆகியோர் வெட்டப்பட்ட இடத்தில் நின்றுகொண்டிருந்தார்கள்.

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், அதனால் தான் ஆஜர் எதிரிகள் அனைவரும் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்ததாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 13 ஆம் எதிரி வங்குடி கிராமத்தில் இல்லை என்றாலும், அவர் சம்பவத்தன்று சம்பவஇடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. 13 ஆம் எதிரி காட்டுமன்னார்கோவிலில் வசிக்கிறார். சம்பவத்தினத்தன்று 13 ஆம் எதிரி சம்பவஇடத்தில் இருந்தார் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

13 ஆம் எதிரி சிதம்பரத்தில் அரசுபோக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவர் சிதம்பரத்தில் வேலை செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. 16.05.2008 அன்று அவர் அன்று அரசு பணியில் பேருந்தில் நடத்துநராக ஓடிகொண்டிருந்தார் என்றாலும், அதனை மறைத்து அவர் சம்பவ இடத்தில் இருந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 ஆகியோர் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜரில்லை. எனவே அவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.